**கோமரங்கடவலை பிரதேச சபை - 2022**

-------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கோமரங்கடவலை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் கோமரங்கடவலை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கணக்காய்வு கட்டணத்தை மதிப்பிட்டு அதற்காக நிதி ஏற்பாடு வழங்கியிருக்கவில்லை. | 2023 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது அவற்றை செலவின கடன் கொடுனர் கணக்கிற்கு சீராக்கம் செய்வதென. | சரியாக கணக்குகளை தயாரிக்க வெண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு நிலையான வைப்பு வட்டி ரூபா 7,245 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததது. | 2023 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது சரி செய்வதென. | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய முத்திரை கட்டணம் மற்றும் 2020,2021 ஆண்டுகளிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 331,500 ஆன முத்திரைக் கட்டணத்தையும் கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டிற்குரிய இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது அதை திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்து இந்த குறைபாட்டை சரி செய்வதென. | -மேற்படி- |
| (ஈ) | அன்பளிப்பாக கிடைத்த கூட்டுத் தொகை ரூபா 408,244 ஆன பொருட்கள் நிலையான | 2023 ஆண்டிற்குரிய இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது அவற்றை | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| சொததுக்களாக நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்திருக்கவில்லை. | நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்வதென | |

**1.6.2 கணக்காய்விற்கான ஆவண சான்றுகள் இல்லாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 128,966,966 பெறுமதியான 06 கணக்கு மீதிகளின், உரிமையை உறுதி செய்யும் ஆவணங்கள், நிலையான சொத்துக்கள் பதிவேடு, பொருட் பதிவேடு, பண்டக கணப்பீட்டு அறிக்கை மற்றும் களஞ்சிய பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்காத காரணத்தால் திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை. | பதிவேடுகளை நாளாதுவரையாக்களை துரிதமாக செய்வதென. | கணக்கு விடயங்களிற்கான சரியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| 24 ஆம் பிரிவு | சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள பாதைகளை இன்வென்றியிற்கு உட்படுத்தி அந்த பாதைகளை வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதிகார பிரதேசத்தில் காணப்படும் அனைத்து பாதைகள் தொடர்பான தரவுகளை நாளாதுவரையாக்கும் நடவடிக்கைகளை தற்போது ஆரம்பித்துள்ளதுடன், எதிர்காலத்தில் அந்த பாதைகளை இன்வென்றியிற்கு உட்படுத்தி வர்த்தமானியில் பிரசுரிக்க தேவையான நடவடிக்கை எடுப்பதென. | காணப்படும் அனைத்து பாதைகளையும் இன்வென்றியிற்கு உட்படுத்தி வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) பிரிவு | கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயலாற்றுகை அறிக்கை கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்டிருக்கவில்லை. | எதிர் வரும் ஆண்டிலிருந்து குறித்த செயலாற்றுகை அறிக்கையுடன் இறுதி கணக்குகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) | 193 ஆம் விதி | பாதிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் குறைநிரப்பு அங்கீகார செலவுகளுடன் ஒப்பிடுகையில் ஒவ்வொரு வருமான விடயங்கள் மற்றும் செலவின விடயங்களின் கீழ் ஏற்பட்ட பற்றாக்குறைகள்/ மிகைகள் தொடர்பான கூற்றுக்கள் தெளிவுபடுத்தல்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | வருமானம் மற்றும் செலவினங்களில் பாதீட்டு பெறுமதியையும் உள்ளவாறான பெறுமதியையும் ஒப்பிட்டு கூற்றொண்றை தயாரிக்குமாறு உரிய அலுவலர்களிற்கு தற்போது அறிவுறுத்தல் வழங்கியுள்ளதுடன், நடைமுறை ஆண்டு முதல் அந்த அறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதெனக. | பிரதேச சபை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 218 ஆம் விதி | கிரயம் ரூபா 71,084,473 ஆன காணிகள் மற்றும் கட்டிடங்களை கணிப்பீடு செய்திருக்கவில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்களை வருடாந்தம் கணிப்பீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுப்பதென. | பிரதேச சபை விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 1654 (ஆ) 1646 | சபையின் 08 வாகனங்களின் தின ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்புகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை. | புதிதாக நியமனம் பெற்ற அபிவிருத்தி அலுவலர் ஒருவரிடம் வாகன விடயத்தை மாற்றப்பட்டதன் காரணத்தால் இந்த தவறு இடம் பெற்றுள்ளதுடன் அதை சரி செய்வதென. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா

225,135 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 1,951,382 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வியாபார வரி | 454 | 74 | 164 | - | 404 | 98 | 98 | 90 |
| வாடகை | 4,133 | 627 | 475 | 325 | 4,418 | 2,858 | 2,685 | 173 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 253 | 33 | 33 | - | 187 | 18 | 18 | - |
| ஏனைய வருமானம் | 638 | 1,324 | 2,252 | 150 | 3,157 | 3,335 | 2,901 | 1,078 |
| மொத்தம் | 5,478 | 2,058 | 2,924 | 475 | 8,166 | 6,309 | 5,702 | 1,341 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **வாடகை** | | |
| 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ரூபா 325,572 ஆன நிலுவை வாடகை வருமானமொன்று காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 173,392 ஆன வாடகை வருமானம் பல ஆண்டுகளாக நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை வருமானத்தை அறவிட தற்போது துரித செயற்பாடு எடுக்கப்பட்டு வருவதென. | நிலுவை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்றாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்ற துணை விதிகளை விதிக்க வேண்டியிருந்த போதும் 2022 | அதிகார பிரதேசத்திற்கு பொறுத்தமான துணை விதிகளை விதித்து செயற்படுத்துவது | முறையாக துணை விதிகள் விதிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திசெம்பர் 31 திகதியளவிலும் துணை விதிகள் விதிக்கப்பட்டிருக்காததுடன் மாகாண சபையினால் அறிமுகஞ் செய்திருந்த 05 துணைச் விதிகள் பின்பற்றப்பட்டிருந்தன. | தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், பிரதேசத்தில் காணப்படும் அறிவித்தல் பலகைகள் தொடர்பாக கணப்பீடு செய்து சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட புதிய வருமான பரிசோதகர் ஊடாக தற்போது செயற்பாடுகளை எடுத்து வருவதென. | |

**3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகார ஊழியர் எண்ணிக்கை மற்றும் உள்ளவாறு காணப்படும் ஊழயிர் எண்ணிக்கையை கவனத்திற் கொள்ளும் போது 07 பதவிகளில் 10 வெற்றிடங்கள் காணப்பட்டன. | இந்த ஊழியர் வெற்றிடங்கள் தொடர்பாக குறித்த அதிகாரிகளிற்கு அவ்வப் போது கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் இது வரை அதற்கு நியாயமான தீர்வொன்று கிடைத்திருக்காததுடன் நிரந்தர வருமான பரிசோதகர் ஒருவர் தற்போது எமது சபைக்கு இணைக்கப்பட்டுள்ளதென. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கிழக்கு மாகாண நிதி சுற்றறிக்கை PT/03/2021 இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய 09 அலுவலர்களிடமிருந்து ரூபா 60,000 பிணைத் தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணைத் தொகையை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதென. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2007 ஆண்டில் மரணித்த அலுவலர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 147,600 ஆன கடன் மீதிகளை அறவிட முடியாது காணப்படுகின்றது. | மரணித்த அலுவலரின் ஓய்வூதியம் செலுத்த குறித்த முன்நடவடிக்கைகள் தற்போது செய்யப்பட்டு வருவதனால் அவரிற்கு பணிக்கொடைத் தொகை செலுத்தும் சந்தர்ப்பத்தில் கடன் தொகையை அறவிட தேவையான நடவடிக்கை எடுப்பதென. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கணக்களி பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1988 பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதி இலக்கம் 168 பிரகாரம் கடந்த ஆண்டிற்குரிய கணக்கு மொழிப்பின் விபரங்கள் மற்றும் கொடுப்பனவு வவுசர்கள் மற்றும் வகைப்படுத்தல் கூற்றுகளுடன் ஒவ்வொறு ஆண்டின கணக்குகளையும் அடுத்த ஆண்டு மார்ச் 31 திகதியிற்கு முன்னர் அதிகாரியினால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் மீளாய்வாண்டின் கணக்குகள் 2023 ஏப்ரல் 10 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இறுதிக் கணக்கு கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பாக சிறந்த அறிவுடன் கூடிய விடய அலுவலர்கள் இல்லாததால் இந்த தாமதம் இடம்பெற்றுள்ளதென. | சுற்றறிக்கை பிரகாரம் கணக்குகளை குறித்த திகதியன்று சமர்ப்பிக்க வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரித்திருந்த பாதீட்டு ஆவணங்களின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகளை உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்கையில் 05 வருமான விடயங்களில் 52.64 சதவீதம் முதல் 107.79 சதவீதம் வரையும் 06 செலவின விடயங்களில் 16.35 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையும் விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படுத்தவில்லை என அவதானிக்கப்பட்டது. | குறைந்த வருமான சபையொன்றாகையால் பாதீட்டின் ஊடாக திட்டமிட்டவாறு வருமானம் கிடைக்காததன் காரணமாக செலவுகளை முகாமை செய்து கொள்ள நேர்ந்ததனால் செலவு விடய ஏற்பாடு எஞ்சுவதற்கு அக் காரணம் தாக்கம் செலுத்தியுள்ளதுடன், எதிர்காலத்தில் உரிய முகாமைத்துவத்துடன் மற்றும் கட்டுப்பாட்டுடன் பாதீட்டை செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | பாதீட்டை நடைமுறை சாத்தியமாக தயாரிக்க வேண்டும். |

## 4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்திலுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையு மற்றும் குறித்த பிரமாணங்களையும் மீளாய்வாண்டினுள் இனங்கண்டிருக்கவில்லை. | பிரதேச சபை மட்டத்தில் செயற்படுத்த முடியுமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அந்த இலக்குமயப்படுதத்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுபதெென. | 2030 அளவில் அடைந்து கொள்ள வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காண்பது மற்றும் அடைந்துக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |